JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw- 2 Witness
for Prosecution

| CC.No. | 98/2024 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | Pw.2 கோவிந்தசாமி | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.03.2026 | | |

**1ம் மற்றும் 2ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி வேறொரு வழக்கில் விசாரணைக்காக சென்றுள்ளார். அவரது சார்பில் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஓரிச்சேரி புதூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, நினைவில்லை. கடந்த 2024 ஆம் வருடம் இரண்டாவது மாதம் ஒரு நாள் மாலையில் நான் வேலைக்கு சென்று திரும்பி வந்தேன். எனது வீடு ஓரிச்சேரி புதூரில் உள்ள BSNL Quarters க்கு அருகில் உள்ளது Quartersலிருந்து சத்தம் வந்தது. அந்த Quartersல் யாரும் குடி இல்லாததால் பிஎஸ்என்எல் ஏடி பழனிசாமி என்னிடம் அவரது போன் நம்பரை கொடுத்திருந்தார். ஏதாவது பிரச்சினை என்றால் எனக்கு ஃபோன் செய்யுங்கள் என்று அவர் நம்பரை என்னிடம் கொடுத்திருந்தார்.

அதனால் நான் உடனடியாக பழனிசாமி சாருக்கு போன் செய்தேன். அவரும் உடனடியாக அங்கு வந்து விட்டார். பின்னர் என்னை அழைத்துக் கொண்டு நாங்கள் இருவரும் Quartersக்குள் சென்றோம். உள்ளே சென்று நாங்கள் பார்த்தபோது, பழனிசாமி என்னிடம் இரண்டு கதவுகள், செப்டிக் டேங்க் மூடிகள் மற்றும் பைப் ஆகியவற்றை காணவில்லை என்று கூறினார். பிறகு காவல் நிலையத்திலிருந்து Quartersக்கு வந்து பார்த்தார்கள் என்னை விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கிச் சென்றார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பைப்பை யார் எடுத்துச் சென்றார்கள் என்கிற எந்த விவரமும் எனக்கு தெரியாது

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 19:17:14 +0530

என்றால், சரிதான். பைப் யார் எடுத்துச் சென்றார்கள் என்பதை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 19:17:20 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 2 Witness
for Prosecution

| CC.No. | 98/2024 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | Pw.3ஜெகதீஸ்வரன் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.03.2026 | | |

**1ம் மற்றும் 2ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி வேறொரு வழக்கில் விசாரணைக்காக சென்றுள்ளார். அவரது சார்பில் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆப்பக்கூடல் விஜயா காலணியில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 2024 ஆம் வருடம் அ.சா.2 கோவிந்தசாமி என்னிடம் BSNL Quarters ல் கதவு, பைப் போன்ற பொருட்கள் திருட்டுப் போய்விட்டதாக கூறினார். மற்றபடி இந்த வழக்கு விபரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 22.02.2024–ம் தேதியன்று மாலை சுமார் 04:30 மணியளவில் நான் டெலிபோன் கோட்ரஸ் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது, சுமார் 25 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் இரும்பு பைப்புகளை கையில் வைத்துக் கொண்டு என்னை கிராஸ் செய்து நடந்து சென்றார்களா என்றால், அப்படி நான் யாரையும் பார்க்கவில்லை. அதனை நான் அ.சா.2 கோவிந்தசாமிக்கு போன் செய்து சொன்னேனா என்றால், கோவிந்தசாமி தான் என்னிடம் திருட்டுப் போய்விட்ட தகவலை கூறினார்.

கடந்த 22.02.2024–ம் தேதியன்று மாலை சுமார் 04:30 மணிக்கு இரண்டு நபர்கள் பைப்பை எடுத்துக்கொண்டு நடந்து சென்றதை நேரில் பார்த்ததாகவும், அதனை கோவிந்தசாமிக்கு போன் மூலம் தகவல் தெரிவித்ததாகவும், போலீஸ் விசாரணையில்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.17 19:17:28 +0530

கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக  எதிரிகளுக்காக ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியில்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு   விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 19:17:33 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani